# ஈழத்தமிழ் மாதா இங்கே வாழ இயலாதா

ஈழத்தமிழ் மாதா இங்கே வாழ இயலாதா
மருதமடு மாதா உந்தன் மனமும் உருகாதா
உள்ளங்கள் நொருங்கிட உலகம் முழுவதும்
உடைந்து சிதறியதே ( 2 )

1
நீலத் தீவில் பாலம் அமைக்க
தோள்கள் தாங்கி வந்தோம் ( 2 )
வாழும் நாட்டில் வழங்கள் சேர்க்க
உழைத்து உருக்குலைந்தோம்
சுவர்கள் எழுந்து உறவுமிருந்து
பிரிந்து போய் தொலைத்தோம் - எங்கும்
சரிந்து சாய்ந்தலைந்தோம்
( ஈழத் தமிழ் )

2
நிலங்கள் மொழிகள் நிறங்கள் தாண்டி
உலகை வலம் வந்தாய் ( 2 )
கலமும் தேய்ந்து தோன்றினாயே
வேளாங்கண்ணியிலே
ஆர்வம் கொண்ட பார்வை ஒன்றை
தமிழர் மீது வைப்பாய்
தனியாய் தயவு கொண்டெழுந்தாய் ( ஈழத் தமிழ் )

3
அருள் நிறைந்த அன்னை நீயே
அன்பர் அடைக்கலமே
இருள் நிறைந்த குழியில் வீழ்ந்தோம்
ஈழம் வருவாயோ
மீண்டும் உலகில் தோன்றி இறைவன்
அருளை வழங்கிடுவாய்
அதனால் ஆழ்ந்து மகிழ்ந்திடுவாய் ( ஈழத் தமிழ் )